அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

1. செயலாக்கக் கட்டணம் என்பது என்ன ?

உங்கள் கடன் விண்ணப்பத்தை செயல்படுத்துவதற்கான நிர்வாகச் செலவுக்கு எதிராக உங்களிடமிருந்து வசூலிக்கப்படும் ஒரு கட்டணம் செயலாகக் கட்டணம்

2. தவணை தவறிய கால தாமத கட்டணம் என்றால் ?

இ.எம்.ஐ தவணைத் தொகைகளை உரிய காலம் கடந்து செலுத்தினால் அதற்கான தவணை தவறிய தண்டக் கட்டணங்களை கடன்தாரர் ஏற்றுக்கொள்ளவேண்டியிருக்கும்.

3. பவுன்ஸ் கட்டணம் என்னால் என்ன?

செலுத்தவேண்டிய இ.எம்.ஐ தொகை செலுத்தல்கள் சீரற்று இருந்தால் எங்கள் தனிப்பட்ட விருப்பத்தின் கீழ் பவுன்ஸ் கட்டணங்கள் அல்லது காலம் கடந்த தொகை செலுத்தல் கட்டணங்களை நாங்கள் விதிக்கவேண்டியிருக்கும். இத்தகைய கட்டணங்களின் பொருந்தும் தன்மை குறித்து மேலும் அறிந்து கொள்ள இங்கே கிளிக் செய்யுங்கள்.

கடன்தாரர்கள் இந்த கட்டண விதிப்பை தவிர்ப்பதில் தீவிர கவனம் செலுத்தவேண்டும் ஏனென்றால் காலம் கடந்து தொகை செலுத்தப்படும் நிகழ்வுகள் அவர்களின் சிபில்(CIBIL) கடன்தகுதி மதிப்பீட்டெண்ணை பாதிக்கும்

4. தவணை செலுத்தத் தவறி நிலுவையிலுள்ள கடன் கணக்குக்கு எதிராக பகுதி தொகை செலுத்த குறைந்த பட்சம் மற்றும் அதிகபட்சமாக எவ்வளவு அனுமதிக்கப்படும்.?

பகுதி தொகை செலுத்துவதற்கான குறைந்த பட்ச தொகை நீங்கள் செலுத்தவேண்டிய இ.எம்.ஐ தொகைக்கும் கூடுதலாக ரூ. 1 ஆக இருக்கும்.

அதிகபட்ச செலுத்துத் தொகையானது உங்கள் கடன் கணக்கில் நிலுவையிலுள்ள மொத்த அசல் தொகைக்கு குறைவான எந்த ஒரு தொகையையும் செலுத்தலாம்.

5. நான் ஒரு பகுதி தொகையை செலுத்தி முடித்தவுடன் எனது இ.எம்.ஐ (EMI) **தொகை அல்லது கடன் தவணை காலம் குறைக்கப்படுமா.** ?

உங்கள் பகுதி தொகை செலுத்தல் உங்கள் இ.எம்.ஐ தொகை அல்லது கடன் தவணை காலம் இதில் எது ஒன்றை பாதிக்க வேண்டும் என்பதை தேர்ந்தெடுக்கும் உரிமை உங்களுக்கு இருக்கிறது. உங்கள் பகுதி தொகை செலுத்தலை எங்கள் ஆன்லைன் கஸ்டமர் போர்டல் வழியில் நீங்கள் மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் அது உங்கள் இ.எம்.ஐ தொகை அல்லது கடன் தவணை காலம் இதில் எது ஒன்றை பாதிக்க வேண்டும் என்பதை நீங்கள் தேர்வு செய்து கொள்ளலாம்.

6. நான் மேற்கொள்ளும் பகுதி தொகை செலுத்தல் என் கணக்கு அறிக்கையில் எப்போது வெளிப்படுத்தப்படும்?

செலுத்தப்பட்ட அத்தகைய முன் செலுத்தல் தொகை எங்களால் பெறப்பட்ட நேரத்திலிருந்து 48 மணி நேரத்திற்குள் உங்கள் கணக்கு அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுவிடும்.

7. என் கடன் கணக்கு செலுத்தத் **தவறி காலம் கடந்து நிலுவையிலிருக்கும் சந்தர்ப்பத்தில் நான் பகுதி கடன் தொகை செலுத்தலாமா** ?

இல்லை. அத்தகைய நிலுவைத் தொகையை செலுத்தி முடித்தபின்னரே நீங்கள் பகுதி தொகை செலுத்தலை மேற்கொள்ளமுடியும். நீங்கள் உங்கள் நிலுவைத் தொகைகளை எங்கள் வாடிக்கையாளர் போர்டல் மூலமாக ஆன்லைனில் செலுத்தலாம்.

8. எனது இன்சூரன்ஸ் **பாலிசியில் பிணை உருவாக்கம் /திருத்தங்களை நான் எவ்வாறு மேற்கொள்ளலாம்.**?

உங்கள் பாலிசியில், பிறந்த தேதி, பான் எண் மற்றும் பெயர் போன்ற எந்த ஒன்றிலும் மேற்கொள்ளவேண்டிய எந்த ஒரு திருத்தங்கள் குறித்தும் தயவு செய்து bhflwecare@bajajhousing.co.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதுங்கள். மாற்று வழியாக, உங்கள் பாலிசி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் வாடிக்கையாளர் சேவை தொடர்பு எண் மூலமாக உங்கள் காப்பீட்டு வழங்குனரை நீங்கள் அணுகலாம்

9. கடன் திருப்பிச் செலுத்துவதற்கான தவணை தேதியை என்னால் மாற்றியமைக்க முடியுமா? **முடியும் என்றால் அதை எவ்வாறு மேற்கொள்வது**?

ஆம் முடியும், ஒவ்வொரு மாத 2 ஆம் தேதி அல்லது 5 ஆம் தேதி ஆகியவற்றுக்கிடையே ஏதாவது ஒரு தேதியை உங்கள் தவணை செலுத்துத் தேதியாக நீங்கள் தேர்வு செய்து கொள்ளலாம். உங்கள் திருப்பிச் செலுத்தும் தவணைத் தேதியை மாற்றியமைக்க bhflwecare@bajajhousing.co.in. என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுத்துமூலமாக ஒரு விண்ணப்பத்தை சமர்ப்பியுங்கள்.

அத்தகைய மாற்றம் எதிர்வரும் இ.எம்.ஐ தேதியன்று செயல்படுத்தப்படவேண்டும் என்று நீங்கள் விரும்பினால், அத்தகைய விண்ணப்பத்தை இ.எம்.ஐ தவணை தேதிக்கு 5 நாளுக்கு முன்னதாக நீங்கள் சமர்ப்பிக்க வேண்டும். உதாரணமாக உங்களது தற்போதைய இ.எம்.ஐ தவணைத் தேதி எதிர்வரும் மாதத்தின் 2 ஆம் தேதி என்று வைத்துக் கொண்டால், அதை நீங்கள் அந்த மாதத்தின் 5 ஆம் தேதிக்கு மாற்றியமைக்க விரும்பினால் அப்போது அதற்கான விண்ணப்பத்தை இந்த நடப்பு மாதத்தில் 28 ஆம் தேதியன்றே (மாதம் 30 நாட்கள் என்ற கணக்கை கருத்தில் கொண்டு) நீங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

திருத்தியமைக்கப்பட்ட தவணை தேதியின் காரணமாக நாட்களின் எண்ணிக்கை கூடவோ / குறையாவோ கூடும் என்பதால் உடனடி இ.எம்.ஐ தேதி மாற்றத்தின் போது உங்கள் இ.எம்.ஐ தொகை மீதான வட்டி மாறுதலுக்கு உட்படும் என்பதை கவனத்தில் கொள்ளுங்கள். அதன் படி மேலே குறிப்பிட்ட எடுத்துக்காட்டில் உங்கள் இ.எம்.ஐ தொகை மீதான வட்டி சிறிது அதிகரித்திருக்கும் (அந்த எதிர்வரும் ஒரு இ.எம்.ஐ க்கு மட்டும்) ஏனென்றால் தவணைத் தேதி தள்ளிப் போடப்படுகிறது.

அத்தகைய நிகழ்வு நேரெதிராக இருந்து நீங்கள் உங்கள் இ.எம்.ஐ தேதியை முன்னதாக நிர்ணயிக்கும் பட்சத்தில் நீங்கள் செலுத்தகவேண்டிய உங்கள் இ.எம்.ஐ தொகை எந்த ஒரு மாற்றமுமில்லாமல் அதே அளவில் இருக்கும் - இதில் கவனிக்க வேண்டியது என்னவென்றால் உங்கள் வட்டி தொகை குறைக்கப்பட்டும் அதற்கு ஈடாக அதில் அடங்கியுள்ள அசல் தொகை சற்று அதிகரித்திருக்கும்.

10. எனது இ.எம்.ஐ தேதியை மாற்றியமைத்த பிறகு எனக்கான கடன் திருப்பிச் செலுத்தும் அட்டவணை எப்படி இருக்கும். ?

தவணைத் தேதி அதே ஒரு மாத காலத்துக்குளாக தள்ளிவைக்கப்பட்டால் மாறும் நாட்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கூடுதல் வட்டி விதிக்கப்படும் (அடுத்து வரும் ஒரு மாதத்திற்கு மட்டுமே பொருந்தும் வகையில்) . இது நாட்களின் எண்ணிக்கை கூடுவதால் அந்த நாட்களுக்கு மட்டும் கூடுதலாக விதிக்கப்படுகிறது அதன் படி அந்த குறிப்பிட்ட இ.எம்.ஐ தவணைத் தொகைக்கான வட்டி விகிதம் கணக்கிடப்படுகிறது.

மாறாக உங்கள் இ.எம்.ஐ தவணைத் தேதியை முன் தேதிக்கு மாற்றியமைக்கும் பட்சத்தில் அடுத்துவரும் மாதத்துக்குக்கான இ.எம்.ஐ செலுத்துத் தொகையில் எந்த ஒரு மாற்றமும் இருக்காது.

11. எனது இ.எம்.ஐ தொகையை நான் அதிகரிக்க முடியுமா?

ஆம் முடியும். நீங்கள் உங்கள் இ.எம்.ஐ தொகையை அதிகரிக்கலாம் அல்லது உங்கள் கடன் காலத்தை குறைத்து அமைத்துக் கொள்ளலாம். தயவு செய்து கீழே கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்றுங்கள்.

முக்கியமான அறிவுறுத்தல்கள் :

- உங்கள் கடன் தொகை **முழுமையாக வழங்கப்பட்டு முடிக்கப்பட்டிருந்தால்**, சுய சேவை விருப்பத்தேர்வைப் பயன்படுத்தி கடன் காலத்தின் மீதான வட்டி விகித மாற்ற விளைவை நீங்கள் நேரடியாகத் தேர்வு செய்யலாம்
- உங்கள் கடன் தொகை பகுதி அளவே வழங்கப்பட்டிருந்தால், கடன் காலத்தை மாற்றுவதற்கான விருப்பத் தேர்வு போர்ட்டலில் **வழங்கப்பட்டிருக்காது** . அத்தகைய சந்தர்ப்பங்களில் , உங்கள் கோரிக்கையை தயவுசெய்து bhflwecare@bajajhousing.co.in என்ற இணையதள முகவரிக்கு மின்னஞ்சல் மூலம் எங்களுக்கு சமர்ப்பிக்கவும்.
- உங்கள் கடன் வசதி ஃப்ளெக்ஸி வகை அடிப்படையில் இருந்தால், வட்டி விகித மாற்றத்தின் தாக்கம் இ.எம்.ஐ தொகையில் மட்டுமே பிரதிபலிக்கும். (உங்கள் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட்ட விரிவான வட்டி விகித மாற்ற நடைமுறைகள் குறித்த மின்னஞ்சலைக் காணவும்.)

கடன் காலம் அல்லது இ.எம்.ஐ தவணைகளை எவ்வாறு சரி செய்து கொள்வது

1. https://myaccount.bajajhousingfinance.in/#/home என்ற வலைத்தள முகவரியில் உங்கள் கணக்கில் லாக் இன் செய்யுங்கள்
2. மாறாக எங்கள் மொபை ஆப் ஐ பயன்படுத்துங்கள்
   - Android:- https://play.google.com/store/apps/details?id=com.bhfl
   - iOS:- https://apps.apple.com/us/app/bajaj-housing-finance-limited/id1599094903
   -
3. மெனுவில் “ மேனேஜ் மை லோன்” பிரிவுக்கு செல்லுங்கள்
4. கீழிறங்கு பட்டியலில் “ **இன்கிரீஸ் மை இ.எம்.ஐ (இ.எம்ஐ.** தொகை அதிகரியுங்கள்) என்பதை தேர்வு செய்யுங்கள்
5. உங்களுக்கு பொருத்தமான விருப்பத் தேர்வை தேர்வு செய்யுங்கள் இ.எம்.ஐ /கடன் காலம்)
6. மாற்றங்களை மீளாய்வு செய்து உறுதிப்படுத்துங்கள்.

12. என் இ.எம்.ஐ தொகையை என்னால் குறைக்க முடியுமா?

உங்கள் கடன் காலத்தின் மீது எந்த ஒரு பாதிப்பையும் விளைவிக்காமல், EMI தொகை மீது மட்டுமே பாதிப்பை விளைவிப்பதை தேர்வு செய்து ஒரு பகுதி தொகை செலுத்திய பிறகே உங்களுக்கான இ.எம்.ஐ தொகையை உங்களால் குறைத்து அமைக்க முடியும்

13. இ.எம்.ஐ தொகையை குறைக்க, கடன் காலத்தை என்னால் அதிகரிக்க முடியுமா?

உங்களுக்கான கடன் காலம் நிறுவனத்தின் கிரடிட் மற்றும் ஆபத்து கொள்கைகளின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது அதன் படி கடன் வழங்கப்பட்டு முடிக்கப்பட்டவுடன் தன்னிச்சையாக கடன் காலத்தை நீடித்து அதிகரிக்கமுடியாது அது வட்டி விகிதம், நிறுவனத்தின் உள்ளக கொள்கைகள், ஒழுங்குமுறை விதி மாற்றங்கள் , கடன் தவறுகள் போன்ற பல்வேறு அம்சங்களுக்கு உட்பட்டது.

14. ஒரு இ.எம்.ஐ க்கான என் முன் இ.எம்.ஐ தொகை **செலுத்தலை என்னால் மாற்றியமைக்க முடியுமா.?**

உங்கள் கடன் முன் இ.எம்.ஐ முறையில் செயல்படும் நிலையில் அதாவது , நீங்கள் வட்டி கூறுகளை மட்டுமே செலுத்திவரும் சந்தர்ப்பங்களில் மற்றும் அதை இ.எம்.ஐ முறைக்கு மாற்ற விரும்பும் நிலையில் அதாவது நீங்கள் அசல் மற்றும் வட்டிக் கூறுகள் இரண்டையும் செலுத்தும் சந்தர்ப்பங்களில், அதற்கான எழுத்து மூலமான விண்ணப்பத்தை தயவு செய்து bhflwecare@bajajhousing.co.in. என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். அதற்கான எதிர்வினையை 48 மணி நேரத்திற்குள் நீங்கள் பெறுவீர்கள்

15. என் கடன் தொகையில் **வழங்கப்படாமல் நிலுவையிலுள்ள தொகையை நான் எவ்வாறு பெறுவது?**

உங்கள் கடன் தொகையில் வழங்கப்படாமல் நிலுவையிலுள்ள தொகை தொடர்பாக உங்கள் விற்பனை பிரதிநிதியுடன் நீங்கள் கலந்துரையாட

வேண்டும். அனைத்து தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு சரிபார்க்கப்பட்டிருந்தால் உங்களுக்கு வழங்கப்பட்ட கடன் அனுமதி கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி உங்கள் கடன் தொகை விடுவிக்கப்படும்.

16. என் பிறந்ததேதி, தகவல் தொடர்பு முகவரி, மின்னஞ்சல் முகவரி மற்றும் மொபைல் எண் போன்ற என் தனிநபர் தகவல்களில் எந்த ஒரு திருத்தங்களையும் நான் எவ்வாறு மேற்கொள்ளமுடியும்?

பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் கஸ்டமர் போர்டல் அல்லது ஆப் மூலமாக உங்கள் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரி மற்றும் மொபைல் எண்ணை நீங்கள் புதுப்பித்துக் கொள்ளலாம். உங்கள் தகவல் தொடர்பு முகவரியை புதுப்பிப்பதற்கான கோரிக்கையை அந்த போர்டல் அல்லது ஆப் இல் நீங்கள் எழுப்பலாம் அதற்கு உங்கள் விண்ணப்பத்தை உறுதிப்படுத்த ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் பான் அட்டை, கடவுச் சீட்டு, வாக்காளர் அடையாள அட்டை, ஓட்டுனர் உரிமம் அல்லது ஆதார் அட்டை போன்ற ஏதாவது ஒரு செல்லத்தக்க அடையாள ஆதார ஆவணத்தை நீங்கள் பகிர்ந்து கொள்ளவேண்டும்.

உங்கள் பிறந்த தேதியை திருத்தியமைக்க bhflwecare@bajajhousing.co.in, என்ற மின்னஞ்சல் முகவரிக்கு நீங்கள் எங்களுக்கு எழுதலாம் மற்றும் அதை மேலெடுத்து செல்ல எங்கள் முகவர் உங்களோடு தொடர்பு கொள்வார்

இதற்கு மாற்றாக உங்களுக்கு மிக அருகாமையிலுள்ள எங்கள் BHFL கிளை அலுவலகத்துக்கு நீங்கள் வருகை தரலாம்

17. எனது பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா மானிய நிதியுதவி விண்ணப்பத்தின் நிலையை நான் எவ்வாறு சரிபார்ப்பது?

பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா மானிய நிதியுதவி என்பது மத்திய அரசின் ஒரு திட்டமாகும் மற்றும் ஒவ்வொரு கடன்

விண்ணப்பத்தையும் அதன் தகுதி அடிப்படையில் பொருந்தும் வகையில் இருப்பதை உறுதி செய்த பிறகு அந்தந்த சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளுக்கு மேலனுப்பி வைப்பதே BHFL இல் பங்காகும். பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் வகுத்துரைக்கப்பட்டவைகளின் படி , ஆவணங்கள் சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்பட்ட பிறகு அந்த உரிமை கோரல்கள் அவர்களால் மதிப்பீடு செய்யப்படும் மற்றும் கடன்தாரர் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் அவை ஏற்றுக்கொள்ளப்படலாம் அல்லது நிராகரிக்கப்படலாம். அத்தகைய நிதியுதவி வழங்கப்பட்டு பெறப்பட்டவுடன் அது கடன்தாரரின் கடன் கணக்கில் வரவு வைக்கப்பட்டுவிடும். மற்றும் இ.எம்.ஐ மீது அது தாக்கத்தை விளைவிக்கும். பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா விண்ணப்ப ஆதாரம் உங்கள் கைவசம் இருக்கும் பட்சத்தில் அதன் நிலை குறித்த தகவலை https://pmaymis.gov.in/ வலைத்தள முகவரியில் நீங்கள் பின் தொடர்ந்து கண்காணிக்கலாம்.

18. ஃப்ளெக்சி லோன் என்றால் என்ன ?

ஃப்ளெக்சி லோன் திட்டங்கள் வழக்கமான காலவரையறை கடன் திட்டங்கள் போலல்லாமல் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் பகுதி தொகை செலுத்த மற்றும் தொகையை எடுத்துக் கொள்ளும் வசதியை உங்களுக்கு வழங்குகிறது. அதன் படி, கடன்தாரர்கள் தங்களுக்கான நிதி ஆதாரங்களின் பயன்பாட்டை எளிதாக திட்டமிடமுடியும்.

19. ஃப்ளெக்சி லோன் திட்டங்கள் மூலமான பரிவர்த்தனைகளை நான் எப்போது தொடங்கலாம். ?

கடன் வழங்கப்பட்டு முடிக்கப்பட்ட பிறகு, ஒரு கடன்தாரர் ஆன்லைனில் கஸ்டமர் போர்டல் மூலமாக 24 x 7 மணி நேரமும் தொகையை எடுக்க அல்லது பகுதி தொகை செலுத்துவதை மேற்கொள்ளலாம்.

20. ஒரு ஃப்ளெக்சி லோன் திட்டத்தில் தொகை எடுத்துக் கொள்வதற்கான பரிவர்த்தனை வசதியுடன் கூடிய நிதி எனக்கு எப்போது வழங்கப்படும். ?

கஸ்டமர் போர்டல் மூலமாக கோரிக்கை எழுப்பப்பட்ட நேரத்திலிருந்து வங்கி செயல்பாட்டு நேரத்தின் 24 மணி நேரத்திற்குள் நிதி உங்கள் வாங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுவிடும்.

21. AMC என்றால் என்ன மற்றும் அது ஏன் என் கணக்கில் வசூலிக்கப்படுகிறது?

ஃப்ளெக்ஸி வசதியானது BHFL வழங்கும் ஒரு தனித்துவமான முன்மொழிவாக்கும். கூடுதல் இருப்பு நிதியை உங்கள் ஃப்ளெக்ஸி கணக்கிற்கு மாற்றுவதன் மூலம் வட்டித் தொகையை சேமிப்பதில் அது உங்களுக்கு உதவுகிறது. மற்றும் எந்த ஒரு தேவைப்படும் சந்தர்ப்பங்களிலும் தொகையை எடுத்துக் கொள்ளும் வசதியை அளிக்கிறது. வருடாந்திர பராமரிப்புக் கட்டணங்கள் ஃப்ளெக்ஸி வசதிகளுக்கு பொருந்தும்.

உங்கள் கடன் அனுமதி கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி வருடாந்திர பராமரிப்புக் கட்டணங்கள் ஒவ்வொரு வருடமும் கீழிறங்கு எல்லை வரையறையின் மீது விதிக்கப்படும். அதாவது, அந்த குறிப்பிட்ட வருட நிறைவு நாளின் போதான வரையறையின் அடிப்படையில். முதல் வருடத்தில் வருடாந்திரப் பராமரிப்புக் கட்டணம் தொடக்கத்தில் கடன் வழங்கப்படும் கால கட்டத்திலேயே விதிக்கப்பட்டுவிடும்

வருடாந்திர பராமரிப்புக் கட்டணங்கள் கட்டணங்களை செலுத்த விரும்பாத தங்களது ஃப்ளெக்ஸி கடன் திட்டங்களை , காலவரை கடன் திட்டங்களுக்கு மாற்றியமைக்க விரும்பும் கடன்தாரர்கள் அவன் /அவள் அருகாமையிலுள்ள கிளை அலுவலகத்துக்கு வருகை தந்து திருத்தப்பட்ட ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு மேற்கொள்ளலாம்

22. என் கடன் கணக்கை முன் முடிப்பதற்கான தொகையை நான் எவ்வாறு, எங்கு செலுத்த வேண்டும்.?

உங்கள் வீட்டுக் கடன் கணக்கை முன் முடிக்க உங்கள் அருகாமையிலுள்ள எந்த ஒரு BHFL கிளையிலும் நீங்கள் தொகையை செலுத்தலாம். நாங்கள் காசோலை அல்லது டி.டி. (கேட்பு வரைவோலை) மூலமான தொகை செலுத்தல்களையும் ஏற்றுக்கொள்வோம்.

23. என் கடன் கணக்கை முன் முடித்த பிறகு எனது அசல் ஆவணங்கள் என்னிடம் எப்போது திரும்ப வழங்கப்படும்?

எங்கள் அமைப்பில் உங்கள் கடன் கணக்கு முடிக்கப்பட்டது உறுதி செய்யப்பட்டவுடன், உங்கள் சொத்து ஆவணங்களை விடுவிப்பதற்காக கோரிக்கை உள்ளகத்திலிருந்து எங்கள் சேமிப்பக கூட்டாளிக்கு உடனடியாக அனுப்பிவைக்கப்படும். அனைத்து இணைக்கடன் கணக்குகளும் முடித்து வைக்கப்பட்டவுடன் அதை தொடர்ந்து 30 நாட்களுக்குள் (கடன் கணக்கு முடித்துவைக்கப்பட்ட தினத்திலிருந்து) அசல் ஆவணங்கள் கிளைக்கு வந்து சேரும்.

எங்கள் சேமிப்பக கூட்டாளியிடமிருந்து ஆவணங்கள் எங்களை வந்தடைந்த உடன் உங்களுக்கு கடன் வழங்கிய உள்ளூர் கிளை சேவை அலுவலர் ஒருவர் உங்களை மின்னஞ்சல் மூலமாக தொடர்பு கொண்டு அந்த ஆவணங்களை நீங்கள் எங்கு பெற்றுக்கொள்ளலாம் என்பதை தெரிவித்து அதன் முகவரியை உங்களோடு பகிர்ந்து கொள்வார்

ஆவணங்கள் சொத்து உரிமையாளர்களிடம் மட்டுமே ஒப்படைக்கப்படும் என்பதை தயவு செய்து கவனத்தில் கொள்ளுங்கள். ஆகவே அனைத்து சொத்து உரிமையாளர்களும் கண்டிப்பாக தங்களது அசல் புகைப்பட அடையாள அட்டையுடன் (பான் அட்டை /ஓட்டுனர் உரிமம்/ ஆதார் அட்டை / வாக்காளர் அடையாள அட்டை) கிளைக்கு வருகை தரவேண்டும்.

24. ஒரு என்.ஓ.சி (தடையில்லாச் சான்று) சான்றிதழை நான் எப்போது எவ்வாறு பெறலாம்?

எங்கள் அமைப்பில் உங்கள் கடன் கணக்கு முடிக்கப்பட்ட பிறகு3 நாட்களுக்குள் உடனடியாக அமைப்பால் உருவாக்கப்பட்ட கடன் முடிப்புக் கடிதம் ஒன்று உங்களுக்கு அனுப்பிவைக்கப்படும். அனைத்து இணை கடன் கணக்குகளும் முடித்துவைக்கப்பட்ட பிறகே தடையில்லாச் சான்றிதழ் வழங்கப்படும்.

25. என் கடன் முடிப்பு நிலை சிபில் (CIBIL) அமைப்பில் எப்போது புதுப்பிக்கப்படும்?.

உங்கள் கடன் கணக்கு முன் முடிக்கப்பட்டவுடன் BHFL அது குறித்து “முடிக்கப்பட்டுவிட்டது” என்ற தகவலை சிபில் (CIBIL) க்கு அனுப்பி வைக்கும். இந்த உங்கள் கடன் முடிப்பு நிலையானது கடன் முடிக்கப்பட்ட தினத்திலிருந்து வழக்கமாக 15 நாட்களுக்குள் உங்கள் சிபில் (CIBIL) பதிவேடுகளில் புதுப்பிக்கப்பட்டுவிடும்.

26. எனக்கான வட்டிவிகிதம் எவ்வளவு அடிக்கடி மாறுதலுக்கு உள்ளாகும்? அதுகுறித்த தகவலை BHFL எனக்கு எவ்வாறு வழங்கும். ?

உங்கள் கடன் காலத்தின் போது BHFL FRR இல் மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் , உள்ளக கொள்கைகள், வெளிப்புற ஒழுங்குமுறை விதித் தேவைகள் அல்லது கடன் திருப்பிச் செலுத்துவதில் தவறுதல் போன்ற நிகழ்வுகள் உடபட ஆனால் அதுமட்டுமே வரையறையில்லாத வகையில் கடன் வசதி வழங்கப்பட்ட பிறகு இந்த ஒப்பந்தத்தின் கீழ் எந்த ஒரு தேவைப்படும் ஆவணங்களையும் கடன்தாரர்கள் தரப்பில் வழங்காமல் /நிறைவேற்றித் தராமல் விளையக்கூடிய எந்த ஒரு தாமதம் காரணத்தின் அடிப்படையிலும் எந்த ஒரு நேரத்திலும் உங்கள் வட்டி விகிதத்தை தனது சொந்த விருப்பத்தின் கீழ் மாற்றியமைக்கும் உரிமையை BHFL தக்கவைத்துக் கொண்டுள்ளது.

அவ்வாறு வட்டி விகிதத்தில் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு மாற்றங்களும் ஒரு மின்னஞ்சல் மற்றும் குறுஞ்செய்தி மூலமாக முன் அறிவிப்பு வழங்கப்பட பிறகே மேற்கொள்ளப்படும் மற்றும் அது எதிர்காலத்தில் செயல்படுத்தும் வகையில் இருக்கும்.

27. BHFL FRR அல்லது ரெப்போ ரேட்இல் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக எனது வட்டி விகிதத்தில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டால் அத்தகைய வட்டி விகித மாற்றம் குறித்த தகவலை BHFL எனக்கு எவ்வாறு அறிவிக்கும். ?

உங்கள் பதிவு செய்யப்பட்ட மொபைல் எண்ணுக்கு ஒரு செய்தி மற்றும் பதிவு செய்யப்பட்ட உங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு ஒரு மின்னஞ்சல் அனுப்பிவைக்கப்படும்